<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் தேதி (11.12.2020) வெள்ளிக்கிழமை பகல் 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. சி.கிருபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

<u>மன்ற பொருள்.1.</u> நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 141 நாள் 30.09.2020 ன்படி 25.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை (மருத்துவமனை) சுற்றி பராமரிப்பு பணிகள் செய்தல் . | 2.00 | M/s.அருணாச்சல அசோசியேட் | **0.04%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | 2 திருமதி .S.புவனேஸ்வரி | **22.64%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : -1 .</u>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.04 %** ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள M/s.அருணாச்சல அசோசியேட் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் . 2579/2020/இ1)**

<u>தீர்மான எண் : 182 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம் அனமதிக்கப்பட்டது .</u>

<u>மன்ற பொருள்.2.</u> நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 119 நாள் 11.09.2020 ன்படி 25.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு முன்னேச்சரிக்கை நடவடிக்கைக்காக உபகரணங்கள்வாங்குதல் மற்றும் வாடகை மின் ஆக்கிகள் , மரங்களை அப்புறபடுத்த JCB இயந்திரம் வாடகைக்கு | 3.00 | திரு.R.ராம்குமார் | **0.01%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.அருணாச்சல அசோசியேட் | **10.00%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுத்தல் பணி . . | | | அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : -1 .</u>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.01 %** ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு.R.ராம்குமார் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் . 2457/2020/இ1)**

**<u>தீர்மான எண் : 183 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்ற பொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண். அ3/2466/20 நாள் . 02.11.2020 ன் படி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட (ICDS) நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 162 நாள் 11.11.2020 ன்படி 25.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஜம்புலிங்கம் பூங்கா அங்கான்வாடி மையம் பழுது நீக்கம் செய்தல் பணி . | 2.00 | திருமதி . S.புவனேஸ்வரி | **0.01%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.அருணாச்சல அசோசியேட் | **2.66%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : -1 .</u>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.01 %** ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி . S.புவனேஸ்வரி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் . 0095/2020/இ1)**

**<u>தீர்மான எண் : 184 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்ற பொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலை திட்டம் (SRP) 2020–21 கீழ் ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3 நாள். 11.12.2020 தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது . இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது .

| வரிசை எண் | நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி 2020– 21 (ரூ. கோடியில்) | நகராட்சியின் பங்களிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் | 2.00 | 1.80 | 0.20 |

எனவே மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் , கீழ்காணும் பணியை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | சிப்பம் எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 1 | விஸ்வநாதபுரம் புதுநகர் புது தெரு 1 , விஸ்வநாதபுரம் தொட்டி தெரு , விஸ்வநாதபுரம் செட்டியார் தெரு , விஸ்வநாதபுரம் புதுநகர் புது தெரு 2 , அப்துல் கலாம் நகர் , அப்துல் ரஹமான் நகர் , SL நகர் , சிவசக்தி நகர் திருகண்டேஸ்வரம் , பல்ராம் நகர் , கல்கி நகர் , பாஸ்யம் நகர் , வள்ளலார் நகர் மற்றும் தந்தை பெரியார் தெரு விரிவாக்கம் சாலையில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 1,3,14,16, மற்றும் 25 ) | 2.631 | 200.00 |

அலுவலககுறிப்பு:- . மன்றம் அனுமதிக்கலாம் .
(ந.க.எண் . 2823/2020/இ1)

<u>தீர்மான எண் : 185 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>மன்ற பொருள்.5.</u> நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் தனி அலுவலரின் முன் அனுமதி நாள் . 10.07.2020 ன்படி 26.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் கீழ்புறம் உள்ள கழிவறையை பராமரிப்பு பணிகள் செய்தல் . | 1.55 | திருமதி . S.பரிமளா | **0.03%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திருமதி . S.புவனேஸ்வரி | **2.60%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : -1 .</u>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.03 % ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி . S.பரிமளா ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம் .
(ந.க.எண் . 1891/2020/இ1)

<u>தீர்மான எண் : 186 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>

<u>மன்ற பொருள். 6.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண் . 22 ஆலை ரோடு அருகில் ஜம்புலிங்கம் பூங்கா மேல்நிலை தண்ணீத் தொட்டி வளாகம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை நடக்கும் சந்தை திடலில் உள்ள சிறிய உயர் மின் கோபுர விளக்கு (250x6) MHL

மின் விளக்கு கம்பம் வடகிழக்கு பருவ மழை மற்றும் நிவர் புயல் காரணமாக முறிந்து கீழே விழுந்துவிட்டது . அதில் உள்ள மின் விளக்குகள் அனைத்தும் மீண்டும் உபயோகபடுத்த இயலாதவாறு பழுதடைந்துவிட்டது . இதன் காரணமாக அப்பகுதியில் இரவு நேரங்களில் இருண்டு உள்ளது . இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளார்கள் . இதே போல் ஜம்புலிங்கம் பூங்கா மேல் நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் உள்ள 2 மின் விளக்குகள் புயல் காரணமாக மிக மோசமாக பழுதடைந்துள்ளது . இதனால் இரவு நேரங்களில் வால்வுகள் திறக்கவும் , மோட்டார் பம்புகள் இயக்கவும் முடியாமல் உள்ளது . இதனால் குடிநீர் விநியோகம் தடைபடும் நிலை ஏற்பட்டுள்ளது . எனவே மேற்படி இரண்டு இடங்களில் பழுதடைந்த 6 மின் விளக்குகளை (4+2) புதியதாக மாற்ற வேண்டியுள்ளது . மேலும் அருகில் உள்ள மற்றொரு மின் கம்பத்தின் கீழ் பாகம் பழுதடைந்துள்ளது . எனவே மேற்கண்ட இரண்டு சிறிய உயர் மின் கோபுரங்களின் கீழ் பகுதியில் கான்கீரிட் தளம் அமைத்து புதிய மின் விளக்குகள் பொறுத்தவும், மேல் நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் புதிய மின் விளக்குகள் பொறுத்தவும் இப்பணியின் அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் , குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்கவும் தயாரிக்கப்பட்டள்ள மதிப்பீடு ரூ.100000/–க்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 2958 /2020/இ1)**

**<u>தீர்மான எண் : 187 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்ற பொருள்.7.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சி எல்லைக்குட்பட்ட மெயின் ரோட்டில் ஸ்டேட் பாங்க அருகில் தண்ணிர் செல்லும் பிரதான குழாய் உடைப்பு ஏற்பட்டதை சரி செய்து மீள பொருத்தியதற்கு ரூ.14000/– திருமதி.S.புவனேஸ்வரி , அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண். 0103 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 188 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்ற பொருள்.8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக ஜெனரேட்டர் 62.5 KVA பழுமு ஏற்பட்டதை ஜெனரல் சர்வீஸ் , மேலும் அலுவலக தானியங்கி மெயின் சுவிட்ச் போர்டு பழுதானதை சரி செய்து மீள இயங்க வைத்ததிற்கு ரூ. 61568/– Universal Sales and Service , புதுச்சேரி அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .

**(ந.க.எண். 2540 /2020/இ1)**

**<u>தீர்மான எண் : 189 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்ற பொருள். 9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி "நிவர்" புயல் 2020 நிதியில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை மற்றும் "சைக்லோன் புயல்" காரணமாக பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலத்தை கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்கள் கடித ந.க.எண். 21976/2020/E2 நாள். 10.12.2020ன் படி இந் நகராட்சிக்கு ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒதுக்கீட்டு தொகையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட அண்ணா நகர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் அருகே பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்தை புதிதாக கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 3119 /2020/இ1)**

**<u>தீர்மான எண் : 190 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்ற பொருள். 10.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் தனி அலுவலரின் முன் அனுமதி நாள் . 26.11.2020 ன்படி 10.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி ஜம்புலிங்கம் பூங்கா மாலை நேர வாரச்சந்தை மற்றும் மேல்நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தில் உள்ள பழுதடைந்த சிறிய உயர் மின் கோபுர விளக்குகள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி . | 1.00 | திரு.R.ராம்குமார் | 0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.அருணாச்சல அசோசியேட் | 0.27% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : -1 .</u>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.01 % ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு.R.ராம்குமார் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் . 2958/2020/இ1)**

**<u>தீர்மான எண் : 191 அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்ற பொருள். 11.** நெல்லிக்குப்பம் நகராட்சியினை திறந்தவெளி மலம் / சிறுநீர் கழிப்பிடமற்ற நகராட்சி என பிரக்கடனம் படுத்திடவும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் நட்சத்திர குறி பெற வேண்டியும், மக்கள் தங்கள் கருத்துகள் மற்றும் ஆட்சேபனை குறித்து தெரிவித்திட தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து தருமாறு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர் மாவட்டம் அவர்களுக்கு கடிதங்கள் முறையே ந.க.எண்.2438/2018/எச்2, நாள்.31.10.2020 மற்றும் நாள்.09.11.2020ல் அனுப்பப்பட்டதில், திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சி(ODF+) என பிரகடனம் படுத்திட தினக்காற்று நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.12,000/–ம் திடக்கழிவு மேலாண்மை திட்ட குறியீடு பெற விளம்பரம் செய்தமைக்கு ரூ.12,600/– எஸ்.எஸ்.பப்ளிகேஷன் என்கின்ற நிறுவனத்திற்கும் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.விளம்பரங்கள் செய்தமைக்கான தொகை ரூ.24,600/–யை தூய்மை இந்தியா திட்ட IEC நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2438/2018/எச்1)**

**<u>தீர்மான எண் : 192 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**மன்ற பொருள்.12.** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து அலுவலகப் பணிகளும் மையப்படுத்தப்பட்ட இணையதளம் (CMA – UTIS – WEBSITE ) , மின்னஞ்சல் , நகராட்சி இணையதளம் , CPS இணையதளம் மற்றும் மத்திய மாநில அரசுகளின் இணையதள வழியாக பணி பார்க்கப்பட்டு வருகின்றது . தற்பொழுது பயன்பாட்டில் உள்ள BSNL Broad Band internet Connection வழியே மேற்சொன்ன பணிகள் நடைபெறும் போது இணைய வேகம் குறைதல் மற்றும் இணைப்பில் அவ்வப்போது துண்டிப்பு ஏற்படுகின்றது . இதன் தொடர்ச்சியாக அலுவலக பணியில் சுணக்கம் ஏற்பட்டு வருகின்றது .

இணையதளம் வேகம் அதிகரிக்கும் பொருட்டு தற்போது பயன்பாட்டிலுள்ள BSNL Broad Band internet இணைப்புக்கு பதிலாக மாற்றாக BSNL Bharat Fibre Cable –FTTH internet இணைப்பு பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வர தோராய செலவினம் ரூ. 8500/– நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் , பட்டியல் தொகை BSNL அங்கீகாரம் பெற்ற டீலர் திரு .R.செந்தில் , R.T.S Communications , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 2939 /2020/இ1)

தீர்மான எண் : 193 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .

மன்ற பொருள்.13. நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் நகர் பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிவறைகள் 21 எண்ணிக்கைகள் தற்சமயம் பயன்பாட்டிலிருந்து வருகிறது. தற்சமயம் திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சி (ODF+) என பிரகடனம் படுத்த வேண்டி உள்ளதினால் தனிநபர் கழிப்பிடம் கட்ட இடவசதி இல்லாத குடியிருப்பில் வசிக்கும் பொதுமக்கள் சமுதாய கழிவறைகளை பயன்படுத்தி வருகின்றனர். மேலும், சமுதாய கழிவறைகளை பராமரிப்பு செய்திட நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், ஒப்பந்த அடிப்படையில் தனியார் வசம் ஒப்படைப்பு செய்து 21 சமுதாய கழிவறைகளையும் 01.12.2018 முதல் 30.11.2019 முடிய ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு செய்திட உத்திரவு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 01.12.2019 முதல் 30.11.2020 முடிய ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு வழங்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்சமயம் பராமரிப்பு செய்திடும் ஒப்பந்ததாரர் பராமரிப்பு செய்து வரும் காலத்தில் பொதுமக்களிடமிருந்து எவ்வித குறைகளும், புகார்களும் நகராட்சிக்கு வந்தது இல்லை என்பதினாலும், பராமரிப்பு மேற்கொள்ள தேவையான பொருட்கள், கிருமிநாசினிகள் மற்றும் பணியாளர்கள் அனைத்தும் ஒப்பந்ததாரரே முழுபொறுப்பு ஏற்றுக்கொண்டே கடந்த ஆண்டு நகராட்சி மூலம் வழங்கிய ஒரு சமுதாய கழிவறைக்கு ரூ.5995/– என்கின்ற விலை விகிதத்திலேயே பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கி உள்ள காரணத்தினால், மேலும் ஓராண்டு காலத்திற்கு 01.12.2020 முதல் 30.11.2021 முடிய கழிவறை ஒன்றுக்கு ரூ.5995/– வீதம் 21 கழிவறைகளுக்கு உத்தேச செலவினம் ரூ.15.25 இலட்சத்திற்கும், மேற்கண்ட பணியினை தொடர்ந்து தற்சமயம் கவனித்து ஒப்பந்ததாரர் திருமதி.எஸ்.புவனேஸ்வரி அவர்களே ஓராண்டு (01.12.2020 முதல் 30.11.2021 முடிய) காலத்திற்கு சமுதாய கழிவறைககள பராமரிப்பு செய்திடுவதற்கான பணி உத்திரவு நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சிக்கு மேற்கொண்டு பணயிழப்பு எதுவும் ஏற்படாது என்பதினாலும், எவ்வித புகார்களும் வராத காரணத்தினாலும் 01.12.2020 முதல் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கலாம்.

3. இச்செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

4. அவசர அவசியத்தினை முன்னிட்டு, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.4107/2018/எச்1)

தீர்மான எண் : 194 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .

மன்ற பொருள்.14. நெல்லிக்குப்பம் நகராட்சி அம்மா உணவகத்தில் உள்ள கேஸ் இணைப்பில் உள்ள ரெகுலேட்டர் மற்றும் கிரைண்டரில் (அரிசி அரைக்கும் இயந்தரிம் ) பழுது ஏற்பட்டதால் அதனை அவசர அவசியம் கருதி சரி செய்து மீள பயனுக்கு கொண்டு வரப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.3950/– செலவினம் திரு .S.வாசு, நகராட்சி பொது பணி மேற்பார்வையாளர் அவர்களால் செலவு செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது அதனால் இத் தொகையை திரு .S.வாசு, நகராட்சி பொது பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 2960 /2020/இ1)

தீர்மான எண் : 195 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .

தனி அலுவலர்,

நெல்லிக்குப்பம் நகராட்சி